**நாள் 30.10.2023**
**OS 27/2022**
**வா.சா. 1 சாட்சி ஜெகதீஸ் மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

04.04.1960 தேதியிட்ட பத்திரத்தின் ஜெராக்ஸ் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.41**. நான் தஞ்சாவூரில் நிரந்தரமாக வசிக்கிறேன். என்னுடைய இரண்டு சகோதரர்கள் சென்னையில் வசிக்கிறார்கள், ஒரு சகோதரர் மும்பையில் வசிக்கிறார். புல எண் 310 என்பதில் மொத்த விஸ்தீர்ணம் 9 ஏக்கர் 80 செண்ட். வா.சா.ஆ.41 பத்திரத்தில் புல எண் 310/4 என குறிப்பிடவில்லை என்றால் ஆமாம். அதன்பிறகுதான் உட்பிரிவு செய்யப்பட்டது. கமலத்தம்மாளுக்கு A schedule லில் 2 ஏக்கர் 26 2/3 சென்ட் ஒதுக்கப்பட்டுள்ளது. D schedule லில் பொன்னுசாமிக்கு 1 ஏக்கர் ஒதுக்கப்பட்டுள்ளது. கமலத்தம்மாளுக்கு ஒதுக்கப்பட்ட 2 ஏக்கர் 26 2/3 சென்ட்டை பூமியில் அடையாளம் காட்டமுடியும். அந்த இடத்திற்கு தனியாக சர்வே வரைபடம் அரசாங்கத்தில் அவர்களே கொடுத்தார்கள். என்அப்பா காலத்தில் அந்த இடத்தை சர்வேயர் வைத்து அளக்கப்பட்டது. அப்போது புலப்படம் கொடுத்தார்கள், 1994 க்கு பின்னர் எங்கள் பெயரில் பட்டா, சிட்டா மாற்றும் போது புலப்படத்தின் நகல் வாங்கினோம். பொன்னுசாமிக்கு ஒதுக்கப்பட்ட 1 ஏக்கரை நாங்கள் எங்களுக்கு சம்மந்தம் இல்லாததால் அளந்துபார்க்கவில்லை. வா.சா.ஆ.9 புலப்படம் எங்கள் நிலத்திற்கு மட்டும் உரியது. வா.சா.ஆ.9 ஐ வைத்துதான் சொத்து முக்கோணம் என சொல்கிறேனா என்றால் கிட்டதட்ட முக்கோணம். வா.சா.ஆ.15 இல் கிழக்கு பக்கத்திலும், தெற்கு பக்கத்திலும் பாதை காட்டப்பட்டுள்ளது. கிழக்கு பக்கத்தில் உள்ள பாதை தெற்கிலும் தொடர்கிறது. இரண்டுபுறமும் உள்ள பாதை ஒரே பாதைதான். வா.சா.ஆ.15 இல் தென்புறம் கூர்மையாக உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.15 இல் தென்புற பாதை காட்டப்படவில்லை எனறால் சரியல்ல. வா.சா.ஆ.41 ஐ நான் படித்து பார்த்திருக்கிறேன். வா.சா.ஆ 41 இல் உள்ள புலஎண்.310 ன் நான்கெல்லை சரியாக உள்ளது. வா.சா.ஆ 41 இல் "RS 310 9 ஏக்கர் 80 சென்ட் புஞ்சையில் கீழ் புறம் என் பாகவீதம், 3 ஏக்கர் 26 2/3 சென்ட் புஞ்சையில் எங்களால் விடப்பட்டிருக்கும் எங்கள் சொந்த பொது ரோட்டுக்கு மேற்கு & வடக்கு ராஜ் மூப்பனார் பாக புஞ்சைக்கும், பொன்னுசாமி மூப்பனார் புஞ்சைக்கும் கிழக்கு, திருச்சி ரஸ்தாவுக்கும், பொன்னுசாமி மூப்பனார் புஞ்சைக்கும் தெற்கு, இந்த நான்கெல்லைக்குட்பட்ட புஞ்சை 2 ஏக்கர் 26 2/3 சென்ட்" என்று உள்ளது. வா.சா.ஆ.41 ஐ என் அப்பாவின் கட்டில் இருந்தது அதை என் சகோதரர் என்னிடம் கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் ஆவண என் 740/1960 சான்றிட்ட நகலில் "RS 310 9 ஏக்கர் 80 சென்ட் புஞ்சையில் கீழ் புறம் என் பாகவீதம், 3 ஏக்கர் 26 2/3 சென்ட் புஞ்சையில் எங்களால் விடப்பட்டிருக்கும் எங்கள் சொந்த பொது ரோட்டுக்கு மேற்கு & வடக்கு ராஜ் மூப்பனார் பாக புஞ்சைக்கும், பொன்னுசாமி மூப்பனார் புஞ்சைக்கும் கிழக்கு, பொன்னுசாமி மூப்பனார் புஞ்சைக்கும் தெற்கு, இந்த நான்கெல்லைக்குட்பட்ட புஞ்சை 2 ஏக்கர் 26 2/3 சென்ட்" என்று உள்ளது. எங்கள் சொத்திற்கு வடபுறம் மெடிக்கல் காலேஜ் ரோடு உள்ளது. பொன்னுசாமி மூப்பனார் புஞ்சைக்கும் தெற்கில் தான் எங்களுடைய சொத்து உள்ளது என்றால் சரியல்ல. பத்திரத்தின் சான்றிட்ட நகலில் எங்கள் சொத்திற்கு வடபுறம் திருச்சி ரோடு காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.41 இல் சொத்து முக்கோணமாக இருப்பதாக காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். புலப்படத்திலும் தென்புறத்தில் ரோடு காண்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. பொன்னுசாமி ராஜகோபாலின் மைத்துனர். சான்றிட்ட நகலில் மூன்று எல்லைகள் தான் கொடுக்கப்பட்டுள்ளது

என்றால் அதில் தவறுதலாக கொடுக்கப்பட்டுள்ளது. எதிர்வழக்குரையை படித்து பார்த்திருப்பேன். எதிர்வழக்குரையில் பத்தி 8 இல் சொல்லியுள்ள விபரங்கள் சரியல்ல. பத்தி 8 இல் சொல்லப்பட்ட நான்கெல்லையை மறுத்து பதிலுரை எதையும் தாக்கல் செய்யவில்லை. இவ்வழக்கில் தற்காலிக தடை உத்தரவு வ.வி.எண் 285/2016 மனுவில் வாங்கியிருக்கிறேன். அந்த மனுவில் வா.சா.ஆ.41 ஐ தாக்கல் செய்யவில்லை. அந்த உத்தரவிற்கு எதிராக சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு ராஜேஸ்வரி தாக்கல் செய்தார். மேல்முறையீட்டிலும் நான் ஆவணங்கள்தாக்கல் செய்தேன். அந்த மேல்முறையீட்டில் முக்கியமான பிரச்சனை வடபுற நான்கெல்லைதான் என்றால் சரிதான். மேல்முறையீட்டு உத்தரவில் சொத்தை அடையாளம் காண்பதில் பிரச்சனை இருப்பதாக சொல்லியிருக்கிறார்கள் என்றால் அது எனக்கு புரியவில்லை. சார்பு நீதிமன்ற தீர்ப்பிற்கு எதிராக CRP 280/2020 என மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் சீராய்வு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். சீராய்வு மனுவிலும், வா.சா.ஆ.41 ஐ தாக்கல் செய்யவில்லை. அசல் ஆவணம் இல்லை என்பதால் தாக்கல் செய்யவில்லை. ஜெராக்ஸ் நகலை தாக்கல் செய்யக்கூடாது என என் வழக்கறிஞர் சொன்னார். ஜெராக்ஸ் நகலைவழக்கிற்காக மோசடியாக தயாரித்திருக்கிறேன் என்றால் சரியல்ல. ஜெராக்ஸ் நகலை என் தந்தைக்கு யார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. என்னுடைய வழக்குரையில் என்னிடம் 04.0.1960 பத்திரத்தின் ஜெராக்ஸ் நகல் இருப்பதாக சொல்லவில்லை. வா.சா.ஆ.41 இல் உள்ள நான்கெல்லை சரி. 2 ஏக்கர் 26 2/3 சென்ட் சொத்திற்கு வடக்கில் பொன்னுசாமி என வா.சா.ஆ.41 இல் காட்டப்பட்டுள்ளது. 2 ஏக்கர் 26 2/3 சென்ட் சொத்திற்கு வடக்கில் பொன்னுசாமி புஞ்சை அதற்கும் வடக்கில் திருச்சி ரஸ்தா ரோடு உள்ளது என வா.சா.ஆ.41 இல் காட்டப்பட்டுள்ளது என்றால் ஆமாம். எங்களுடைய சொத்திற்கு வடக்கே உள்ள பொன்னுசாமியின் புஞ்சையை நான் அளந்து பார்க்கவில்லை. அது எவ்வளவு என்று எனக்கு தெரியாது. 2 ஏக்கர் 26 2/3 சென்ட் சொத்திற்கு வடக்கில் உள்ள பொன்னுசாமி புஞ்சையை விற்கப்பட்டதாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. பொன்னுசாமி 1 ஏக்கரை விற்றதாக தாக்கல் செய்த ஆவணம் வா.சா.ஆ.18 இவ்வழக்கிற்கு சம்பந்தம் இல்லாதது என்றால் சரியல்ல. பொன்னுசாமி மூப்பனார் சுப்ரமணிய பிள்ளைக்கு விற்றதாக வா.சா.ஆ.18 தாக்கல் செய்திருக்கிறேன். 04.04.1960 தேதியிட்ட பத்திரத்தில் திருச்சி ரோட்டிற்கு தென்புறம் உள்ள சொத்து கமலத்தம்மாளுக்கு ஒதுக்கப்படவில்லை என்றும், பறவை நாச்சியாரின் பத்திரத்தில் நான்கெல்லை தவறாக காட்டப்பட்டுள்ளது என்றும், நானும் அதை நம்பி கிரயம் வாங்கிவிட்டேன் என்றும், எனக்கு விற்றவர்க்கு திருச்சி ரோட்டிற்கு தென்புறம் உள்ள சொத்தை விற்க உரிமைஇல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- A. மலர்விழி)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.